


TN US SP

http://tnussp.co.in/

iihs INDIAN INSTITUTE FOR HUMAN SETTLEMENTS

# எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது?

## பொதுவான தடுப்பு மற்றும் ஆபத்தை குறைக்கும் நடவடிக்கைகள




## சமூகத்தில் பரவாமல் தடுப்பதற்கான மிகச்சிறந்த வழிமுறைகள் கீழ்க்கண்டவாறு:

- ஆல்கஹால் சேர்ந்த கை சுத்திகரிப்பானை அடிக்கடி உங்கள் கைகளில் தேய்த்-துக்கொள்ளவும் அல்லது சோப் மற்றும் தூய்மையான தண்ணீர் மூலம் கைகளை கழுவவும். உங்கள் கைகள் அழுக்காக இருந்தால் சோப்பு போட்டு நீரால் கழுவுவதை மட்டுமே செய்யவும்.
- கண்கள், மூக்கு மற்றும் வாய் இவற்றை தொடுவதை தவிர்க்கவும
- தும்மல் அல்லது இருமல் வரும்போது வாயை மூடிக்கொள்ளவும். தும்மும் போதும் இருமும் போதும் கைகுட்டை மூலம் வாயையும் மூக்கையும் மறைத்துக்கொள்ளவும். அல்லது முழங்கை மூலம் வாயையும் மூக்கையும் மறைத்துக்கொள்ளவும். பயன்படு-த்திய கைக்குட்டையை சுத்தமாக துவைத்து வெயிலில் உலர்த்தவும்
- உங்களுக்கு சளி, இருமல் மூச்சுவிட சிரமம் ஆகிய மூச்சுக்குழாய் தொடர்பான தொந்தரவுகள் இருந்தால் மருத்துவ முகக்கவசம் அணிந்துகொள ளவும். முகக்கவச த்தை அப்புறப்படுத்திய உடன் கைகளை சோப் மூலம் கழுவவும்.
- மூச்சுக்குழாய் தொடர்பான அறிகுறிகள் (தும்மல், இருமல்) உள்ளவர்களிடமிருந்து (குறைந்தபட்சம் ஒரு மீட்டர்) இடைவெளி விட்டு நிற்கவும்.
- காரணமின்றி வெளியே செல்வதையும் அதிக மக்கள் கூடும் இடங்களையும் தவிர்க கவும்
- நீங்கள் உடல் நலமின்றி இருந்தால் வீட்டிலேயே இருங்கள்
- உங்கள் மொபைல்போன் முகத்தில் படாமலிருக்க ஹெட்ஃபோன் ஃ ஒலிபெருக்கி பயன்படுத்தவும்

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களுக்கு பரிந்துரைக்கப்படும் நல்ல நடைமுறைகள்




- உடை மாற்றும் பகுதியில் அந்தந்த நாளின் பணிகளை ஆரம்பிக்கும் முன் பணி உடைகளை அணிந்து கொள்ள வேண்டும். எப்போதும் முகக்கவசம், கையுறைகள், காலணிகள் மற்றும் முறையான ஆடைகள் (முழுக்கை சட்டை, பேண்ட் மற்றும் மேலங்கி) அணிந்திருக்க வேண்டும்.
- கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் கைகளுக்கு பயன்படுத்தும் கை சுத்திகரிப்பான், மற்றும் சோப் எப்போதும் இருப்பதை உறுதி செய்யவும். பணியாளர்கள் அவற்றை பயன்படுத்த ஊக்குவிக்கவும்

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களுக்கு பரிந்துரைக்கப்படும் நல்ல நடைமுறைகள்




- அடிக்கடி தொடக்கூடிய பகுதிகள் அல்லது பொருட்களை (வால்வுகள், உபகரணங்கள், பைப், கம்புகள், கதவு கைப்பிடிகள், கைதாங்கிகள், மேசையின் மேற்புறம், மின் ஸ்விட்ச்கள் மற்றும் நீர் குழாய்கள்) 2 அல்லது 4 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யவும்.




- கசடு கழிவு பெற்று பரிசோதிக்கும் போது அதிக கவனத்துடன் செய்ய வேண்டும். கைகள் அல்லது இடங்களில் தற்செயலாக கசடு கழிவு பட்டுவிட்டால் உடனே கழுவிவிட வேண்டும்.

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களுக்கு பரிந்துரைக்கப்படும் நல்ல நடைமுறைகள்




- கசடு கழிவு சிந்தியிருந்தால் அதில் சுண்ணாம்பு தெளிக்கப்பட்டு கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.


கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களுக்கு
பரிந்துரைக்கப்படும் நல்ல நடைமுறைகள்
• காயங்கள் இருந்தால் அதில் கசடு கழிவு படாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களுக்கு பரிந்துரைக்கப்படும் நல்ல நடைமுறைகள்



- செயல்பாடுகளோ, பராமரிப்பு பணிகளோ நடைபெறாத போது நுழைவு திறப்புகளை முறையாக மூடிவைக்க வேண்டும்.

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களுக்கு பரிந்துரைக்கப்படும் நல்ல நடைமுறைகள்




- பணி உடைகள் மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை தினமும் கிருமிநாசினி கலந்த நீரில் நன்கு சுத்தப்படுத்த வேண்டும்.
- பணி முடிந்து வெளியேறும் முன் உடை மாற்றும் பகுதிக்குச் சென்று தங்கள் சொந்த உடைகளை அணிந்து கொள்ள வேண்டும்

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தை இயக்குபவர்ளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள




- ஒரே நேரத்தில் 5 பார்வையாளர்களுக்கு மேல் நிலையத்தினுள் அனுமதிக்க வேண்டாம் (அல்லது அரசு அவ்வப்போது குறிப்பிடும் எண்ணிக்கை)
- ஊரடங்கு உத்தரவு அமலில் இருக்கும் காலத்தில் நகர உள்ளாட்சி அமைப்புகளிடம் அடையாள அட்டையோ அல்லது அனுமதிக்கடிதமோ பெற்று அவற்றை எப்போதும் பயணத்தில் வைத்திருக்கவும்

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தை இயக்குபவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள



- பணியாளர்களின் உடல்நிலையை அவ்வப்போது பரிசோதித்து கோவிட் அறிகுறிகள் தென்பட்டால் உடனே நகர உள்ளாட்சி அமைப்புகளிடம் அறிவிக்க வேண்டும். நோய்த்தொற்று அறிகுறிகள் இருந்தால் மருத்துவ உதவி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- உடன்பணியாளர்கள் உடல்நலமின்றி இருப்பது தெரிந்தால் அவர்கள் விடுப்பு எடுக்க ஊக்குவிக்கவும்.

# கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய இயக்குநர்களுக்கு பரிந்துரைக்கப்படும் நல்ல நடைமுறைகள்



**தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களைத் தேர்வு செய்தல்**

- துணியாலான முகக்கவசம்
- கையுறைகள்
- தலைப்பட்டை மற்றும் மணிக்கட்டு பட்டை
- பாதம் முழுவதையும் மறைக்கும் ஷூக்கள் மற்றும் பூட்சுகள்

# தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை அணிதல் மற்றும் அகற்றுதல்

மூக்கு மற்றும் வாயை முகக்கவசம் மூலம் மூடி கயிறு ∴எலாஸ்டிக் கொண்டு தலை மற்றும் கழுத்தின் பின்புறம் நன்கு கட்டவும். அகற்றும்போது: முகக்கவசவத்தின் முன்பக்கம்



கையுறைகளை அணியவும் கையுறையின் வெளிப்புறம் கிருமித்தொற்று உள்ளது. கையுறை அணிந்த ஒரு கை மூலம்



பூட்ஸ்கள். கால்களை மறைக்க பூட்ஸ் அணியவும். பூட்ஸ்களை கையுறை அணிந்த கைகள் மூலம் அகற்றவும்.



# கைகளை கழுவுதல் கீழ்க்கண்ட ஐந்து தருணங்களிலும் கடைபிடிக்கப்பட வேண்டும்



- பாதுகாப்பு உபகரணங்களை அணிவதற்கு முன்னும், களைந்த பின்னும், கையுறைகளை மாற்றும் போதும்
- கழிவறைகளை சுத்தப்படுத்திய பின் மற்றும் பராமரிப்பு பணிகளைச் செய்தபின்
- சுவாச உறுப்புகளிலிருந்து வெளியேறும் திரவங்களை தொட்டபின் (மூக்கு சீந்தியபின்)
- உணவு உட்கொள்ளும் முன்
- கழிவறை பயன்படுத்தியபின்



## இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஃபார் ஹ்யூமன் சேட்டில்மெண்ட்ஸ் (ஐஐஹச்ஸ்)

- **ஐஐஹச்ஸ்**, இந்திய குடியமர்வுகள் சமமான, நிலைத்து நீடித்த மற்றும் திறன்மிக்க உருமாற்றம் அடைவதை குறிக்கோளாகக்கொண்ட ஒரு தேசிய கல்வி நிறுவனம் ஆகும். **ஐஐஹச்ஸ்**யின் பணி நகர்ப்புற வீடுகள், நீர், சுகாதாரம், பொருளாதார மேம்பாடு மற்றும் பருவநிலை மாற்றம் ஆகிய துறைகள் அனைத்தையும் உள்ளடக்கியது
- **ஐஐஹச்ஸ்** தற்போது 150க்கும் மேற்பட்ட திறன்மிகு வல்லுநர்களுடன் ஆராய்ச்சி, களப்பணி மற்றும் செயல்பாட்டுக்கல்வி ஆகிய துறைகளில் பெங்களுரு, மும்பை, சென்னை, டில்லி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் பணியாற்றி வருகிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரப் பணிகள் உறுதுணைத் திட்டம்

- தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரப் பணிகள் உறுதுணைத் திட்டம், **ஐஐஹச்ஸ்**ஸால் இயக்கப்படும் பல நிறுவனங்களின் கூட்டிணைப்பு ஆகும். இத்திட்டம் தமிழகத்தில் உள்ள 663 நகரங்கள் மற்றும் மாநகரங்களில் நகர சுகாதாரச்சங்கிலி குறிப்பாக கசடு கழிவு மேலாண்மை மேம்பாடு அடைவதற்காக தமிழ்நாடு அரசுக்கு உறுதுணையாக இருக்கிறது.
- தூய்மைப்பணியாளர்கள் இந்த திட்டத்தின் மிக முக்கிய அங்கமாக உள்ளார்கள். தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரப் பணிகள் உறுதுணைத் திட்டம் ஒருசில நகரங்களில் இவர்களுடன் இணைந்து இவர்களின் ஆரோக்கியம், பணி பாதுகாப்பு, பணியாளர் நலம் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக பணியாற்றி வருகிறது.